# திருவள்ளூர் சட்டமன்றத் தொகுதியில் கழக வேட்பாளர் வி.ஜி.ராஜேந்திரன் வாக்கு சேகரிப்பு!



## சட்டப்பேரவைப் பொதுத்தேர்தல் - 2026

தி.மு.க. தலைமையிலான மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணிக் கட்சி சார்பில் எண்.04, திருவள்ளூர் சட்டமன்ற தொகுதியில் போட்டியிடும் கழக வேட்பாளர் வி.ஜி.ராஜேந்திரன் வாக்குச் சேகரிக்கும் நிகழ்ச்சி விவரம்.

**தேதி : 19.04.2026 - ஞாயிற்றுக்கிழமை**

| வ. எண் | இடம் | நேரம் |
|---|---|---|
| 1. | சேலை ஊராட்சி | காலை 07.00 மணி முதல் 08.00 மணி வரை |
| | **திருவள்ளூர் நகரம்** | |
| 2. | வார்டு எண்.27, வரதராஜநகர் கற்குழாய் சாலை, காந்தி நகர் | காலை 8.00 மணி |
| 3. | வார்டு எண்.25, சித்திவிநாயகர் கோயில் தெரு, தாவூத்கான் பேட்டை | காலை 8.45 மணி |
| 4. | வார்டு எண்.26, லால்பகதூர் சாஸ்திரி தெரு, பழங்குடியினர் குடியிருப்பு இரயில்வே குடியிருப்பு | காலை 9.15 மணி |
| 5. | வார்டு எண்.22, வள்ளலார் தெரு, குட்டைக்கரை தெரு, ஜெ.என் சாலை | காலை 9.30 மணி |
| 6. | வார்டு எண்.23, கலைஞர் நகர், இந்திரா நகர், காமாராஜபுரம் | காலை 10.00 மணி |
| 7. | வார்டு எண்.21 – இராஜாஜிபுரம் –2 | காலை 10.30 மணி |
| 8. | வார்டு எண்.24 – எம்.ஜி.ஆர் நகர் | காலை 11.00 மணி மதியம் 01.00 வரை |
| 9. | வார்டு எண்.19 – சமர்வியாஸ்நகர் | மாலை 4.00 மணி |
| 10. | வார்டு எண்.20 – புதிய என்.ஜி.ஓ காலனி (ம) பழைய என்.ஜி.ஓ காலனி, தேவி மீனாட்சி நகர் | மாலை 4.45 மணி |
| 11. | வார்டுஎண்.17 – காமாட்சி நகர் | மாலை 5.30 மணி |
| 12. | வார்டு எண்.18 | மாலை 6.15 மணி |
| 13. | வார்டு எண்.14 – வி.எம் நகர், ஜெயின் நகர் | இரவு 7.00 மணி |
| 14. | வார்டு எண்.16 – காந்திபுரம் ஜெ.என் சாலை, ஐ ஆர் என் அவென்யூ | இரவு 7.30 மணி முதல் 10.00 மணி வரை |

தேர்தல் பணிக்குழு - **திருவள்ளூர் சட்டமன்றத் தொகுதி**



மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணியின் மயிலாப்பூர் சட்டமன்ற தொகுதியின் வேட்பாளர் மயிலை த.வேலு மயிலை மேற்கு பகுதி அனைத்து வட்டத்திலும் வாகனத்தில் தீவிர வாக்கு சேகரிப்பு நேற்று (18.04.2026) 121 அ வட்டத்தில் தொடங்கி 121 வது, 123 அ, 123, 122 அ, 122 வது ஆகிய வட்டத்தில் முழுவதும் நடைபெற்றது. இதில் மயிலை மேற்குப் பகுதிச் செயலாளர் நந்தனம் கி.மதி எம்.சி., மயிலை மேற்கு பகுதியை சார்ந்த மாநில, மாவட்ட, பகுதி, நிர்வாகிகள் வட்டக் கழக செயலாளர்கள் மாவட்ட பிரதிநிதிகள் பகுதி பிரதிநிதிகள், வட்ட நிர்வாகிகள் அணிகளின் மாநில, மாவட்ட ,பகுதி, வட்ட அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்கள் BLA 2,BLC , BDO, மற்றும் முன்னோடிகள் கழகத்தோழர்கள் அனைவரும் கலந்து கொண்டனர்.



மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி அண்ணநகர் சட்டமன்ற தொகுதி கழக வெற்றி வேட்பாளர் நே.சிற்றரசு நேற்று (18.04.2026) அண்ணாநகர் தெற்கு பகுதிக்குட்பட்ட அனைத்து வட்டங்களில் வசிக்கும் பொதுமக்களிடம் திறந்த ஜீப் மூலம் பிரசாரத்திற்குச் சென்று உதயசூரியன் சின்னத்திற்கு வாக்களிக்குமாறு தீவிர வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டார். இந்நிகழ்வில் மத்திய சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதி மாறன், எம்.கே.மோகன், எம்.எல்.ஏ, பகுதி செயலாளர் ந.இராமலிங்கம், தொகுதி பார்வையாளர் வே.கௌதமன், வட்டக்கழக செயலாளர்கள், தோழமை கட்சிகளைச் சார்ந்த நிர்வாகிகள் மற்றும் கழக நிர்வாகிகள் பங்கேற்றனர்.



சேப்பாக்கம் 62 அ வட்டத்தில் கழக வேட்பாளர் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்களை ஆதரித்து சென்னை மேற்கு மாவட்ட சிறுபான்மை நல உரிமை பிரிவு அமைப்பாளர் எஸ் எஸ் ரஹ்மத்துல்லா தலைமையிலும் பகுதி செயலாளர் எஸ் மதன் மோகன், தொகுதி பொறுப்பாளர் பி.கே.பாபு வட்டச் செயலாளர் கே.மகேஷ் முன்னிலையில் வீடு வீடாக சென்று வாக்குகள் சேகரித்தனர். இதில் உடன் மாவட்ட துணை அமைப்பாளர் சிறுபான்மையினர் பிரிவு எஃப் நசீர் ஏ. அன்வர் பாஷா மற்றும் கழகத் தோழர்கள் கலந்து கொண்டனர்.

# தொகுதி மறுவரையறை மசோதா தோல்வி! தென்னிந்தியாவைத் தவிர்த்து விட்டு தாங்கள் நினைத்ததை சாதிக்க நினைத்த பா.ஜ.க.வின் கனவு தவிடு பொடி!

## ‘தினகரன்’ நாளேடு தலையங்கத்தில் கண்டனம்!



தினகரன்

ஏப்ரல் 18, 2026 சனிக்கிழமை

**பாஜ அரசின் படுதோல்வி**

நாடாளுமன்ற சிறப்பு கூட்டத்தொடர் நடைபெற்று வரும் நிலையில், 33 சதவீத மகளிர் இடஒதுக்கீடு மற்றும் தொகுதி மறுவரையறை மசோதாக்களை நிறைவேற்ற ஒன்றிய பாஜ அரசு துடித்துக் கொண்டிருக்கிறது. இதில், 33 சதவீத மகளிர் இடஒதுக்கீட்டிற்கு, கடந்த 2023ம் ஆண்டின்போது மசோதா ஒருமனதாக நிறைவேற்றப்பட்டபோதே, அடுத்து வந்த 2024 நாடாளுமன்றத் தேர்தலில் ஒன்றிய பாஜ அரசு ஏன் நடைமுறைப்படுத்தவில்லை என்ற கேள்வி எழுகிறது. தற்போது இந்த மகளிர் இடஒதுக்கீட்டை 2029 எம்பி தேர்தலில் அமல்படுத்த உள்ளதாகவும் ஒன்றிய பாஜ

சென்னை, ஏப்.19 –

தொகுதி மறுவரையறை மசோதா தோல்வியடைந்ததன் மூலம் தென்னிந்தியாவை தவிர்த்து விட்டு வட இந்தியாவை மட்டும் வைத்து தாங்கள் நினைத்ததை சாதிக்க நினைத்த பா.ஜ.க.வின் கனவு தவிடு பொடியாகியுள்ளது என தினகரன் நாளேடு தலையங்கத்தில் குறிப்பிட்டுள்ளது.

அது வருமாறு:–

நாடாளுமன்ற சிறப்பு கூட்டத்தொடர் நடைபெற்று வரும் நிலையில், 33 சதவீத மகளிர் இடஒதுக்கீடு மற்றும் தொகுதி மறுவரையறை மசோதாக்களை நிறைவேற்ற ஒன்றிய பா.ஜ. அரசு துடித்துக் கொண்டிருக்கிறது. இதில், 33 சதவீத மகளிர் இடஒதுக்கீட்டிற்கு, கடந்த 2023ம் ஆண்டின்போது மசோதா ஒருமனதாக நிறைவேற்றப்பட்ட போதே, அடுத்து வந்த 2024 நாடாளுமன்றத் தேர்தலில் ஒன்றிய பா.ஜ. அரசு ஏன் நடைமுறைப்படுத்தவில்லை என்ற கேள்வி எழுகிறது. தற்போது இந்த மகளிர் இடஒதுக்கீட்டை 2029 எம்.பி. தேர்தலில் அமல்படுத்த உள்ளதாகவும் ஒன்றிய பா.ஜ. அரசு தெரிவித்துள்ளது. ஆனால், மக்க ளவை உறுப்பினர்களின் எண்ணிக்கையை அதிகரிக்காமலேயே 33 சதவீத மகளிர் இடஒதுக்கீட்டை எப்படி அமல்படுத்த முடியும் என்று எதிர்க்கட்சிகள் தொடர்ந்து வலியுறுத்தி வருகின்றன. இதற்கு பிரதமர் மோடி தரப்பில் இருந்தோ, ஒன்றிய அமைச்சர் அமித்ஷாவிடம் இருந்தோ தெளிவான எந்த ஒரு விளக்கமும் அளிக்கப்படவில்லை.

2023ம் ஆண்டில் மசோதா நிறைவேற்றப்பட்ட பிறகு ஏற்பட்ட காலதாமதத்திற்கு தனது தலைமையிலான ஒன்றிய அரசே பொறுப்பு என்பதை ஒப்புக்கொள்ளாத பிரதமர் மோடி, நாடாளுமன்றத்தில் ஆற்றிய உரையில் மீண்டும் பழைய புராணத்தையே பாடியுள்ளார். ஆனால், ‘மகளிர் இடஒதுக்கீடு என்ற போர்வையில் வரும் தொகுதி மறுவரையறை மசோதாவை எதிர்ப்பதில் எதிர்க்கட்சிகள் ஒற்றுமையுடன் நிற்கும்’ என எதிர்க்கட்சிகள் உறுதியுடன் நின்றன. மகளிர் இடஒதுக்கீடு அமல்படுத்தப்படாததற்கு விளக்கம் அளிக்காமல், அவர்கள் மீண்டும் மீண்டும் தொகுதி மறுவரையறையை முன்னிறுத்தி பேசினர்.

இதற்கிடையில் தொகுதி மறுவரையறை மசோதா, 33 சதவீதம் மகளிர் இடஒதுக்கீடு உள்ளிட்ட மசோதாவிற்கான வாக்கெடுப்பு நேற்று நடந்தது. மக்களவையில் மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மை தேவையாக இருக்கிறது.

அந்தவகையில் 352 ஆதரவு வாக்குகள் தேவையாக இருந்தது. நேற்றைய வாக்கெடுப்பில், 528உறுப்பினர்கள் தங்கள் வாக்குகளை செலுத்தினர். அதில், 298 உறுப்பினர்கள், ‘ஆம்’ என்று மசோதாவுக்கு ஆதரவும், 230 உறுப்பினர்கள் இல்லை என்று எதிராகவும் வாக்களித்தனர். இதனால் மசோதா தோல்வி அடைந்தது. தொகுதி மறுவரையறையோடு இணைத்து மகளிர் இடஒதுக்கீடு மசோதா வும் கொண்டுவரப்பட்டதால் அதுவும் தோல்வி அடைந்துள்ளது.

இந்த திருத்த மசோதா நாடாளுமன்றம் விரும்பும்போது மட்டுமே தொகுதி மறுவரையறை செய்யும் அதிகாரத்தை ஒன்றிய அரசுக்கு வழங்க இருந்தது. ஆனால், இந்த தொகுதி வரையறை மசோதா குறித்து எதிர்க்கட்சிகள் கேள்விக்கணைகளை தொடுத்துக் கொண்டே இருந்தன. அவற்றை சமாளிக்க முடியாமல், முதலில் தொகுதி மறுவரையறை மசோதாவில் சில மாற்றங்களை செய்ய ஒன்றிய அரசு ஒப்புக்கொண்டது. தற்போது மசோதா தோல்வியடைந்தது ஒன்றிய பா.ஜ. அரசுக்கு பெரும் பின்னடைவாகவே பார்க்கப்படுகிறது.

தமிழகத்தில் பற்ற வைத்த நெருப்பு ஒன்றிய பா.ஜ. அரசை சுட்டுள்ளது. இதன் எதிரொலியாக மசோதா தோல்வியடைந்து ஒன்றிய அரசின் தன்னிச்சையாக முடிவெடுக்கும் நடவடிக்கைக்கு கடிவாளம் போட்டுள்ளது. தென்னிந்தியாவில் இருந்து ஓங்கி ஒலித்த குரல்களின் நீட்சியாகவே இந்த மசோதா தோல்வியடைந்ததை பார்க்க முடிகிறது. இதன் மூலம் தென்னிந்தியாவை தவிர்த்துவிட்டு வடஇந்தியாவை மட்டும் வைத்து தாங்கள் நினைத்ததை சாதித்துக் கொள்ள முடியும் என்ற பா.ஜ. தலைமையின் கனவு தவிடுபொடியாகி உள்ளது.

இவ்வாறு அத்தலையங்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

# நெல்லை எம்.எம்.சாமி தலைமை! இரா.லட்சுமணன் முன்னிலை! சலவை தொ.மு.ச. சார்பாக ஜே.ஜே.எபினேசரை ஆதரித்து ஆலோசனைக் கூட்டம்!

## கி.நடராசன் ஆலோசனை வழங்கினார்! சுபா.சந்திரசேகர் பங்கேற்பு!

சென்னை, ஏப்.19

ஆர்.கே.நகர் தொகுதி வெற்றி வேட்பாளர் ஜே.ஜே.எபினேசர் எம்.எல்.ஏ, ஆதரித்து புது வண்ணை ஏ.இ.கோயில் தெருவில் பகுதி தேர்தல் பணிமனையில் தமிழ்நாடு சலவைத் தொ.மு.ச. சார்பாக ஆலோசனைக் கூட்டம் மாநில தலைவர் நெல்லை எம்.எம்.சாமி தலைமையில் பகுதிச் செயலாளர் இரா.லட்சுமணன், ஆர்.டி.ராஜா, எம்.வேதலட்சுமி, கே.பி.சதிஷ்குமார், ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது.

மாவட்ட கவுன்சில் செயலாளர் சுந்தரமூர்த்தி, அங்காளப்பன், ஜெயகுமார், டி.தேவராஜ், பாலன், சௌந்திரபாண்டி, முருகன், முனுசாமி, வரதராஜ், ஆகியோர் வரவேற்றனர்.

கூட்டத்தில் பேரவைத் தலைவர் கி.நடராசன் ஆலோசனை வழங்கி சிறப்புரையாற்றினார்.

தொகுதி தேர்தல் பார்வையாளர் சுபா.சந்திரசேகர், வெ.சு.சத்தியநாராயணன், ஒளி ஒலி அ.பாபு, கட்பீஸ் ப.சோமசுந்தரமூர்த்தி, எஸ்.பி.எஸ்.புத்தன், நா.கோதண்டன், தா.வ. மு.கஜேந்திரன், வி.முத்து, அன்பு, திருப்பதி சாமி, டி.தேவராஜ், எஸ்.யுவராஜ், எஸ்.செந்தில், சுரேஷ்பாபு, பிடிசி சுரேஷ் குமார், ரங்கநாதன், ஹேமந்த்குமார், விஜயகுமார், பிரகாஷ், சசிகுமார், பாஸ்கர், மற்றும் மாவட்ட கழக பகுதி கழக அனைத்து அணிகளின் நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

## மயிலாப்பூர் தொகுதியின் வெற்றி வேட்பாளர்

# மயிலை த.வேலுவை ஆதரித்து முதல்வர் மு.க.ஸ்டாலின் வாக்கு சேகரிக்கிறார்!

## சென்னை தென்மேற்கு மாவட்ட தொழிலாளர் அணி அமைப்பாளர் என்.வடிவேல் வேண்டுகோள்!

சென்னை, ஏப்.19-

சென்னை தென்மேற்கு மாவட்ட தொழிலாளர் அணி அமைப்பாளர் என்.வடிவேல் விடுத்துள்ள வேண்டுகோள் வருமாறு :

மயிலாப்பூர் தொகுதியின் வெற்றி வேட்பாளர் மயிலை த.வேலு அவர்களை ஆதரித்து கழக தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் இன்று (19.4.2026 - ஞாயிற்றுக் கிழமை) மாலை 6.00 மணியளவில் தேனாம்பேட்டை எல்டாம்ஸ் சாலையில் வாக்கு சேகரிக்கிறார்.

இதில் தொழிலாளர் அணியை சார்ந்த மாவட்ட நிர்வாகிகள், பகுதி அமைப்பாளர்கள், பகுதி துணை அமைப்பாளர்கள் அனைவரும் தவறாமல் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு பணிவண்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு சென்னை தென்மேற்கு மாவட்ட தொழிலாளர் அணி அமைப்பாளர் என்.வடிவேல் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

# ஆவடி சட்டமன்றத் தொகுதியில் கழக வேட்பாளர் ஆவடி சா.மு.நாசர் வாக்குசேகரிப்பு!



## சட்டப்பேரவைப் பொதுத்தேர்தல் - 2026

தி.மு.க. தலைமையிலான மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணிக் கட்சி சார்பில் எண்.06, ஆவடி சட்டமன்ற தொகுதியில் போட்டியிடும் கழக வேட்பாளர் ஆவடி சா.மு.நாசர் வாக்குச் சேகரிக்கும் நிகழ்ச்சி விவரம்.

**தேதி : 19.04.2026 (ஞாயிற்றுக்கிழமை)**

| வாக்குசேகரிக்கும் நேரம்/இடம் | வட்ட கழகச் செயலாளர்கள் | ஏற்பாடு |
|---|---|---|
| காலை 9.00 மணி இருசக்கர வாகன பேரணி (ஆவடி மாநகரம் முதல் திருநின்றவூர் வரை) | திருமுல்லைவாயில் முதல் திருநின்றவூர் காவேரி திரையரங்கம் வரை | |
| மாலை 4.00 மணி நடிகர் **திரு.சத்யராஜ்** அவர்கள் திறந்தவெளி வாகன பிரச்சாரம் இடம்:திருநின்றவூர் லட்சுமி திரையரங்கம் அருகில் | | **தி.வை.ரவி** (நகர செயலாளர்) |

தேர்தல் பணிக்குழு - **ஆவடி சட்டமன்றத் தொகுதி**

## சென்னை வடகிழக்கு மாவட்டம் – மாதவரத்தில்

# நடிகர் சத்யராஜ் - மாதவரம் எஸ்.சுதர்சனத்தை ஆதரித்து வாக்கு சேகரிப்பு!



சென்னை வடகிழக்கு மாவட்டம், மாதவரம் சட்டமன்ற தொகுதி திமுக வேட்பாளர் மாதவரம் எஸ்.சுதர்சனம் அவர்களை ஆதரித்து நடிகர் சத்யராஜ் அவர்கள் இன்று (19.04.2026 - ஞாயிறு) மாலை 3.00 மணியளவில். சென்னை மாநகராட்சி 28வது வார்டில் உள்ள கண்ணபிரான் கோயில் தெருவில் வாக்கு சேகரிக்கிறார்.

எனவே மாதவரம் தெற்கு பகுதியில் உள்ள மாவட்ட, பகுதி நிர்வாகிகள் அனைத்துஅணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், BLA-2, BLC, BDA, BYA மற்றும் ஆதரவு அணிகள் மதச்சார்பற்ற ஜனநாயக முற்போக்கு கூட்டணியின் நிர்வாகிகள், கழகத் தோழர்கள் அனைவரும் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

**மாதவரம் எஸ்.சுதர்சனம் எம்.எல்.ஏ.**
செயலாளர், வடகிழக்கு மாவட்ட தி.மு.க.

# மாதவரம் சட்டமன்றத் தொகுதியில் தி.மு.க. கூட்டணி வேட்பாளர் மாதவரம் எஸ்.சுதர்சனம் வாக்கு சேகரிப்பு!



சென்னைவடகிழக்கு மாவட்டம் மாதவரம் சட்டமன்ற தொகுதி தெற்கு பகுதியில் உள்ள வார்டு25 மற்றும் வார்டு26ல் மதசார்பற்ற முற்போக்கு கூட்டணி மாதவரம் சட்டமன்ற தொகுதி வேட்பாளர் மாதவரம் எஸ். சுதர்சனம் தேர்தல் பரப்பரையை தொடங்கி வாக்குசேகரிக்கும் விவரம் பின்வருமாறு:

**19.04.2026 - இன்று**

| வ.எண் | பிரச்சாரம் மேற்கொள்ளும் இடங்கள் | நேரம் |
|---|---|---|
| 1 | தெற்கு பகுதி வார்டு 25 மற்றும் வார்டு 26 | காலை 6.00 – மதியம் 1.00 |

மேற்குறிப்பிட்டுள்ள பகுதியில் உள்ள சம்மந்தப்பட்ட கழக நிர்வாகிகள், திமுக கூட்டணியின் நிர்வாகிகள் அனைவரும் கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளபடுகிறது.

**மாதவரம் எஸ்.சுதர்சனம் எம்.எல்.ஏ.**
செயலாளர், வடகிழக்கு மாவட்ட தி.மு.க.



அம்பத்தூர் சட்டமன்றத் தொகுதிக் கழக வேட்பாளர் மருத்துவர் பு.பூர்ணிமாவை ஆதரித்து 93 வது வட்டத்தில் உதயசூரியன் சின்னத்திற்கு உழைப்பாளி இதழின் துணை ஆசிரியர் ஆ.சி.அருணகிரி, பேரவைச் செயலாளர் ந.தனசேகரன் ஆகியோர் தலைமையில், மாநகர் போக்குவரத்துக் கழக ஊழியர் முன்னேற்ற சங்கத் தலைமை சங்க நிர்வாகிகள் மற்றும் சங்க முன்னோடிகள் பெருந்திரளாக கலந்து கொண்டு வாக்கு சேகரித்தனர்.



சென்னை மேற்கு மாவட்டம், சேப்பாக்கம் பகுதி, 114 (அ) வட்டத்தில் கழக வெற்றி வேட்பாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்களை ஆதரித்து பெல்ஸ் ரோடு, பார்த்தசாரதி தெரு, ஐய்யா தெரு, பெரிய தெரு, பாரதி சாலை, எம்.ஏ.சாகிப் தெரு, திருவல்லிக்கேணி நெடுஞ்சாலை ஆகிய பகுதிகளில் மாவட்ட அமைப்பு சாரா ஓட்டுநர் அணி அமைப்பாளர் சி.கே.ரெங்கராஜ் தலைமையில் மாவட்ட தலைவர் கே.குப்புசாமி, மாவட்ட துணை அமைப்பாளர்கள் தி.ஆனந்தன், உ.முருகன், முத்துகிருஷ்ணன், பகுதி அமைப்பாளர்கள் சுரேஷ், கன்னியப்பன், பிரான்சிஸ், தட்சிணாமூர்த்தி, ராஜதுரை, பி.எல்.ஏ.2, பி.எல்.சி. நிர்வாகிகள் கலந்து கொண்டு வீடு வீடாக சென்று வாக்கு சேகரித்தனர்.



மதுரவாயில் கழக வேட்பாளர் காரம்பாக்கம் க.கணபதியை 153 வது வார்டு மாமன்ற உறுப்பினர் திருமதி. சாந்தி ராமலிங்கம் முன்னிலையில் வாக்கு சேகரித்தார். உடன் தென்சென்னை மாவட்ட பிரதிநிதி கோ ராமலிங்கம், வட்டக் கழக பொருளாளர் பொன் ராமசாமி, முன்னாள் மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர். சின்னா என்கிற மணிகண்டன், ஆதிதிராவிட மாவட்ட அணிகளின் துணை அமைப்பாளர் ஆர்.டி.பாஸ்கர், பகுதி பிரதிநிதி ஜே.சி.பி.குமார், முன்னாள் வார்டு கவுன்சிலர் தீனதயாளன் மற்றும் வட்டக் கழக நிர்வாகிகள் தோழமைக் கட்சி நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.